# சுவடி ஆற்றுப்படை

அல்ஹாஜ் எஸ்.எச்.எம். ஜெமீல்

இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவடி ஆற்றுப்படை

(முதலாம் பாகம்)

அல்ஹாஜ் எஸ்.எச்.எம்.ஜெமீல் எம்.ஏ.,

இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகம்
வெளியீடு: 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1850 முதல் 1949 வரையிலான
இலங்கை முஸ்லிம்களின்
நூல் வெளியீடுகள்

## உள்ளே...


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| | சிறப்புரை | 5 |
| | மதிப்புரை | 7 |
| 1. | நூல் தேட்டம் | 13 |
| 2. | 1850 - 1899 | 18 |
| 3. | 1900 - 1924 | 30 |
| 4. | 1925 - 1949 | 43 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SUVADI ĀRRUPPADAI

## (BIBLIOGRAPHY OF BOOKS BY SRI LANKAN MUSLIMS)


**Author** : Alhaj S.H.M.Jameel B.A. (Econ. Sp.); Dip.Ed; M.A.,
State Secretary, Office of the Minister of State for Muslim Religious & Cultural Affairs, Colombo, Sri Lanka

**Publishers** : Islamic Book Publishing Centre, Sainthamaruthu, Kalmunai

**Printers** : Threeyem Exports, 83, Angappa Naick street, Madras-600 001

**First Edition** : 1994 August 1

**Price** : Rs.30/-


இலங்கையின் முதலாவது 'அல்லாமா' பட்டமளித்துக்
கௌரவிக்கப்பட்ட பேராசிரியர்
அல்ஹாஜ் கலாசூரி மஹ்மூத் முகம்மது உவைஸ்
அவர்களின்

## சிறப்புரை

ஆற்றுப்படுத்தல் என்பது வழிச் செலுத்தலாம். வழிப் படுத்துதல் என்றும் பொருள் படும். ஆற்றுப்படை என்பது அதிலிருந்து பெறப்பட்டதாகும். ஆற்றுப்படை ஓர் இலக்கிய வடிவம். பிரபந்தம் என்றும் வழங்கப்படும். தமிழில் தோன்றிய இலக்கிய வடிவங்களுள் தொன்மை வாய்ந்தது ஆற்றுப்படை யாகும். தமிழ் இலக்கிய வகைகளுள் மிக்க சிறப்புடையதாகக் கருதப்படுவது ஆற்றுப்படை. ஏனைய இலக்கிய வகைகளுக்கு இல்லாத சிறப்பு ஆற்றுப்படை இலக்கியத்துக்குண்டு. தமிழ் இலக்கியங்களுள் சங்கச்சான்றோரால் போற்றி வளர்க்கப்பட்ட ஓர் இலக்கிய வகை ஆற்றுப்படை எனலாம்.

புரவலன் ஒருவனிடம் பரிசில் பெற்று வரும் ஓர் இரவலன் பரிசில் பெற விரும்பும் அதே சமயம் வறுமையில் வாடும் ஒருவனை தனக்குப் பரிசில் வழங்கிய அந்தப் புரவலனிடம் வழிப்படுத்துவதையே - ஆற்றுப்படுத்துவதையே ஆற்றுப்படை இலக்கிய வடிவம் கொண்டிருக்கும். ஒவ்வொரு ஆற்றுப்படையும் அவ்வாற்றுப்படையில் ஆற்றுப்படுத்தப்படுபவர் பெயரினால் அழைக்கப்படுகிறது. பாணர், கூத்தர், பொருநர், புலவர் என்போர் ஆற்றுப் படுத்தப்பட்டால் அப்பெயர்களால் அந்த ஆற்றுப்படை அழைக்கப்படும். திருமுருகாற்றுப்படை முருகக் கடவுளிடத்து ஆற்றுப்படுத்தப்படுவது. ஆற்றுப்படுத்தப்படும் இடத்தாலும் ஆற்றுப்படை நூல்கள் அழைக்கப்படுகின்றன. வித்துவான் வா.குலாம் காதிறு நாவலரால் இயற்றப்பெற்ற ஆற்றுப்படை, மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புலவராற்றுப்படை என வழங்கப்படுவதைக் காணலாம். திரு மக்கமாநகருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றுப்படுத்தப்படும் ஆற்றுப்படை திரு மக்கா ஆற்றுப்படை என வழங்குகிறது.

சுவடி ஆற்றுப்படை தனித்தன்மை வாய்ந்தது. சுவடிக் காப்பகம் அல்லது ஆவணக் காப்பகம் என்பது இலங்கையரால் எழுதப் பெற்ற நூல்களை-கை ஏட்டுப் பிரதிகள், அச்சியற்றப் பட்ட பிரதிகள் முதலியவற்றை எதிர்காலத்தில் பயன்படுத்தக் கூடிய வகையில் பாதுகாப்பாக வைக்கப்படும் ஒரு வகையான நூல் நிலையமே. அத்தகைய அரசின் ஆவணக் காப்பகத்துக்குச் சென்று ஆய்வினை மேற்கொண்டு பல அரிய தமிழ், அறபுத் தமிழ் நூல்களைக் கண்டெடுத்த ஓர் ஆய்வாளர் அத்தகைய ஆர்வம் உடைய மற்றொருவரை அங்குச் சென்று ஆய்வினை மேற்கொள்ளுமாறு தூண்டும் வகையிலே இந்த நூல் அமைந்துள்ளது. செய்யுள் வடிவாக இந்நூல் அமையவில்லை எனினும் பயனுடைய அரிய விவரங்கள் பலவற்றை தன்னிடத்தே கொண்டு விளங்குகிறது இந்தச் சுவடி ஆற்றுப்படை.

பயனுள்ள அருமையான சுவடிகளைப் பற்றி அறிய வரும்புவோருக்கு ஒரு வழிகாட்டியாக இந்நூல் அமையும் என்பதனாலேயே ஆய்வாளர் அல்ஹாஜ் எஸ்.எச்.எம்.ஜெமீல் அவர்கள் இந்நூலுக்கு சுவடி ஆற்றுப்படை எனப் பெயரிட்டிருக்கலாம். பண்டைய இஸ்லாமிய இலக்கியங்களைப் பற்றி அறிய விரும்பும் ஆர்வலர்க்கும் ஆய்வாளர்க்கும் இந்நூல் ஒரு கை நூலாக அமைய வேண்டும் என்று விழுமிய நோக்கத்துடனேயே இந்நூல் - சுவடி ஆற்றுப்படை - தயாரிக்கப்பட்டுள்ளது. ஆசிரியரின் இந்த அரிய முயற்சி பல வழிகளிலும் பயன் தரவல்லது என்பது திண்ணம். அல்ஹாஜ் ஜெமீல் அவர்களின் இவ்வரும் பணி வளர்ந்தோங்க எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கிறேன். வளர்க அவர் தொண்டு. வாழ்க தமிழ் மொழி.

'மர்கஸி', ஹேனமுல்லை, ம.முகம்மது உவைஸ்.
பாணந்துறை.
***18.06.1994.***
***09.01.1415.***



கொழும்பு பொது நூலகப் பிரதி நூலகராகவும், தேசிய நூலக சேவைகள் சபையின் உதவிப் பணிப்பாளராகவும், இலங்கை நூலகச் சங்கத்தின் தலைவராகவும் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் கடமையாற்றி நூலகத்துறையில் அதிஉயர் அனுபவம் பெற்றவரும்; தற்போது இலங்கை இஸ்லாமிய நிலைய கௌரவப் பணிப்பாளராகக் கடமையாற்றும்

**அல்ஹாஜ் எஸ்.எம்.கமால்தீன்** அவர்களின்

## மதிப்புரை

இந்நாட்டின் முன்னணிக் கல்விமான்களுள் ஒருவரும், எனது அரிய இலக்கிய நண்பர்களுள் ஒருவருமாகிய ஜனாப். எஸ்.எச்.எம்.ஜெமீல் அவர்கள் கல்வித் துறையில் பரந்துபட்ட நீண்டகால அனுபவமிக்கவராவார். அவரது கல்விச் சேவைக் காலம் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரையிலான தொடர்புடையதாக அமைந்திருந்தது. தற்போதும்கூட முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் என்ற வகையில் கல்வித் துறையிலும், இஸ்லாமிய அறிவேடுகளின் வளர்ச்சியிலும் மிகுந்த ஈடுபாடுள்ளவராயுள்ளார்.

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளரென்ற வகையில் அவ்வமைச்சின் கடமைப்பணிகளிடையிலும், ஜனாப் ஜெமீல் இஸ்லாமிய இலக்கியத் துறையில் ஆற்றிவரும் பணி தனிச்சிறப்புடையதாகும். மேலும், அமைச்சின் சிறப்பம்சங்களுள் ஒன்றாக இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, இலக்கியப் பங்களிப்பு முதலியவற்றை அச்சுருவில் ஆக்கி வழங்குவதில் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அஸ்வர் அவர்கள் காட்டும் ஆர்வத்திற்கும், செயற்பாட்டிற்கும் ஜனாப் ஜெமீல் அளித்து வரும் ஒத்துழைப்பிற்கு நாம் பெரிதும் கடப்பாடுடையோம்.

இது தவிர, ஜனாப் ஜெமீல் அவர்களின் கணிசமான அளவிலான எழுத்துப் பணியையும், இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகத்தின் மூலம் அவர் ஆற்றிவரும் அரிய சேவையினையும் தான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகவியற்றுறையில் ஈடுபட்டுள்ள எனக்கு இலங்கையில் வெளிவந்துள்ள இஸ்லாமிய இலக்கிய நூல்களையும், முஸ்லிம்களால் எழுதப்பட்ட ஏனைய நூல்களையும் பட்டியல்படுத்த வேண்டுமென்ற எண்ணம் நீண்ட காலமாக இருந்துவந்துள்ளது. இந்த வகையில் ஓர் ஆரம்ப முயற்சியாக இலங்கையில் 1979 ஆம் ஆண்டில் நடைபெற்ற நான்காவது இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டின் போதுஒரு சில தேர்ந்த நூல்களைக் கொண்ட சிறிய நூற்பட்டியலொன்றை பேருவளை,ஜாமியா நளீமியாவின் சார்பில் வெளியிட்டேன். மேலும் என்னிடம் நூலகவியற்றுறையிலான பாடநெறியைப் பயிலும் சில முஸ்லிம் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாகப் பேராசிரியர் அல்லாமா எம்.எம்.உவைஸ், கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி, எஸ்.எச்.எம்.ஜெமீல், எம்.எம்.எம்.மஹ்ரூப், சி.எம்.ஏ.அமீன், எம்.எம்.சமீம் போன்றவர்களுடைய நூல்கள், கட்டுரைகள் ஆகியவற்றுக்கான பட்டியலாக்கத்தை பயிற்சிநெறியில் ஓர் அம்சமாகக் கொள்ள வைத்துள்ளேன்.

இதேவேளையில், இஸ்லாமிய இலக்கிய ஆக்கங்களுக்கான முழுமையானதொரு பட்டியலைத் தயாரிக்கும் பாரிய பணியை மேற்கொள்ள யார் முன்வருவாரென நான் ஆவலோடு எதிர்பார்த்திருந்தேன். இவ்வகையில் தற்போது ஜனாப் ஜெமீல் அவர்களின் ஆர்வமிக்க ஈடுபாட்டினைக் கண்டு பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

நெடுங்காலமாகத் தொலைவில் கிழக்கேயுள்ள சாய்ந்தமருதுவில் எவ்வித ஆரவாரமுமின்றி அமைதியாக ஜனாப் ஜெமீல் ஆற்றிவந்துள்ள அரியதொரு பணியின் பரப்பை அவரது முன்னுரையின் வாயிலாகவே தற்போது அறிந்து மிகுந்த வியப்படைந்தேன்.

இப்பணியைப் பற்றி அவர் பின்வருமாறு கூறுகிறார்:

"மிக நீண்டகாலமாக என்னிடம் ஒரு பழக்கம் இருந்து வருகிறது. ஏதாவதொரு நூல் என் கைவசம் கிடைத்தவுடன் அதனை வாசிப்பதற்கு முன்பாகவே அதற்குரிய விவரண அட்டையை (CATALOGUE CARD) தயாரித்தலே அதுவாகும். காலக்கிரமத்தில் இவை நூற்றுக்கணக்கில் சேர்ந்துவிட்டன."



ஜனாப் ஜெமீல் அவர்கள் செய்து வருவது போன்று தாம் படிக்கும் நூல்களுக்கான விவரண அட்டைகளைச் சேகரித்துவரும் ஒரு முஸ்லிமை இந்நாட்டில் நானறிந்த வரையில் இதுவரை கண்டதில்லை! இந்த மகத்தான பணிகளுக்காக நான் அவரைப் பெரிதும் பாராட்டுகிறேன். இம்முயற்சியில் அவரோடு ஒத்துழைத்த அனைவரும் எமது பாராட்டுக்குரியவராவர்.

நூற் பட்டியல்களின் முக்கியத்துவத்தைப் பற்றி இங்கு நான் விரிவாகக் கூற வேண்டியதில்லை. அறிவுத் தேட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைவரும் இவற்றின் இன்றியமையாத் தன்மையை நன்குணர்வர். பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர் முதல் பல்கலைக்கழக மட்டத்தில் பயில்வோரும், ஆராய்ச்சித்துறையில் ஈடுபட்டுள்ளோரும், பொது வாசகரும் கூட இப்பட்டியல்களின் மூலம் தாம் நாடிச் செல்லும் அறிவுத் துறைக்கு ஆற்றுப்படுத்தப்படுவர். நூலகங்களில் இயங்கும் உசாத்துணைப் பிரிவுகள் இந்நூற் பட்டியல்களின் மூலமே பாவனையாளர்களுக்குச் சிறந்த சேவையைப் புரிய முடிகிறது.

இலங்கை முஸ்லிம்களின் ஆக்கங்களைப் பற்றிய தகவல்களைப் பெறுவது மிகவும் சிரமமானதொரு காரியமாகும். அதுவும் காலத்தால் முற்பட்ட நூல்களைப் பற்றிய தகவல் பெறுவது அரிதான காரியமாகும். இந்நிலையில் நாட்டில் வெளியாகும் நூல்களைப் பற்றிய முழுமையான தகவல்களைத் தேடிக் கொள்வதற்கான ஒரே மார்க்கம் இலங்கைத் தேசிய நூலகத்தினால் வெளியிடப்படும் இலங்கைத் தேசிய நூற் பட்டியலாகும்.

இலங்கையில் வெளியாகும் நூல்களைப் பதிவு செய்யும் "அச்சிடுவோர், வெளியீட்டாளர் கட்டளைச் சட்டம்" 1885 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச் சட்டம் 1976 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது. இதன்படிக்கு இலங்கையில் நூல்களை அச்சிடுவோர் தாம் வெளியிடும் ஒவ்வொரு நூலினதும் ஐந்து பிரதிகளைப் பதிவுக்காகத் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இந்நூல்கள் தேசிய அரும்பொருட்சாலை, பேராதனைப் பல்கலைக்கழகம், தேசிய நூலகம் ஆகியவற்றுக்கு வைப்பிற்காக வழங்கப்படும்.

இலங்கையில் நூல் வெளியீடு நீண்டகால வரலாற்றைக் கொண்டிருந்த போதிலும் 1963 ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களே தேசிய நூற் பட்டியலில் பதிவாகியுள்ளன. இதற்கு முற்பட்ட நூல்களுக்கான பட்டியலைத் தயாரிப்பதற்குத் தேசிய நூலகம் தற்போது திட்டமிட்டுள்ளது. இதற்காகத் தேசிய ஆவணக் காப்பகம், பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் உதவியைப் பெற்று இந்நூற் பட்டியலைத் தயாரிக்கவுள்ளது.

எனவே நூல்களை வெளியிடும்போது எமது முஸ்லிம் எழுத்தாளர்கள் தமது நூல்களின் பிரதிகளைத் தேசிய ஆவணக் காப்பகத்தில் வைப்பிற்காகக் கொடுத்துதவுவது சட்டப்படிக்கு அத்தியாவசியமாகும். அவ்வாறு கொடுக்கப்படும் நூல்களுள் ஒன்று தேசிய நூலகத்திற்கு வைப்பிற்காக அனுப்பப்படும். இந்நூல்களினடியாகவே தேசிய நூற் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. இந்நூற்பட்டியலில் நூல்களின் முழு விபரங்களும் பதிவாகின்றன. எமது எழுத்தாளர்களின் படைப்புக்கள் நிரந்தரப் பாதுகாப்பைப் பெறச் செய்வதற்கு இதுவே சிறந்த வழியாகும். மேலும் தேசிய நூற் பட்டியல் மூலம் எழுத்தாளர்கள் தமது படைப்புக்களைத் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் அறிவுலகின் கவனத்திற்குக் கொண்டு வரமுடியும்.

அத்தோடு முஸ்லிம் எழுத்தாளர்கள் தமது படைப்புகளுக்கு இலங்கைத் தேசிய நூலகம் இலவசமாக வழங்கும் ஐ.எஸ்.பி.என் (ISBN) இலக்கத்தைப் பெற்று அதனைத் தமது நூலில் பொறித்துக் கொள்வது பயன்மிக்கதாகும். இதன்படி நூல்களுக்கான சர்வதேச நியம இலக்கம் ஒவ்வொரு நூலுக்கும் தனித்துவமானதோர் இலக்கமாயிருக்கும். அச்சிடப்படும் ஒவ்வொரு நூலினையும் சர்வதேச ரீதியில் இனங்காண உதவுவதே இவ்விலக்கத்தின் நோக்கமாகும். வெளியீட்டாளர்கள், விநியோகஸ்தர்கள், நூலகங்கள், வாசகர்கள் அனைவரும் ஒரு நூலினை இவ்விலக்கத்தின் மூலம் இனங்காண முடியும்.

எழுத்தாளர்கள் தமது படைப்புக்களை அச்சிடு முன் தேசிய நூலகத்திற்கு விண்ணப்பித்துISBNஇலக்கத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். இவ்விலக்கத்தை நூலில் இடம்பெறச் செய்வதன் மூலம் அந்நூலினைச் சர்வதேச ரீதியில் இனங்காணச் செய்தல் சாத்தியமாகும்.

ஜனாப் ஜெமீல் அவர்கள் மிகவும் சிரமப்பட்டுத் தயாரித்துள்ள இந்நூற்பட்டியல் இஸ்லாமிய இலக்கியத்துறையில் ஈடுபட்டுள்ளோருக்கும் ஏனைய ஆய்வாளர்களுக்கும் இன்றியமையாததொரு சாதனமாகும். மேலும் வருங்காலச் சந்ததியினருக்கு இப்பட்டியல் அரியதொரு முதுசமாகும். அவர்தம் அறிவுத் தேட்டத்திற்குத் துணையாகும் பேரேடாகும்.



இந்நூற்பட்டியல் ஆண்டு வரிசையில் தரப்பட்டுள்ளது. இதேபோல் ஆசிரிய வரிசை, பொருள் வரிசை என்ற முறையிலும் வருங்காலத்தில் ஜனாப் ஜெமீல் அவர்கள் இப்பட்டியலை வழங்குவார்களாயின் மிகவும் பிரயோசனமாயிருக்கும். இதற்குக் கனிசமான அவகாசம் வேண்டுமாயிருக்கும். எனவே இப்பணிக்கு இலங்கை நூலகச் சங்கப் பாடநெறியில் பயிலும் மாணவர்களின் உதவியைப் பெறுதல் நலமாயிருக்கும்.

மற்றும், 1950 ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட நூல்களுக்கான விவரண அட்டைகள் ஆயிரத்துக்கும் மேல் தம்மால் சேகரிக்கப்பட்டுள்ளதாகக் கூறும் ஜனாப் ஜெமீல் அவர்கள் மீது அவற்றையும் நூலுருவாக்கும் பளுவானதொரு கடமை சார்ந்துள்ளது. இவ்வகையில் அவர்கள் தொடர்ந்து அயராது உழைப்பார்களென்பது எனது உறுதியான நம்பிக்கையாகும்.

ஜனாப் ஜெமீல் அவர்களுக்கு ஊக்கமளித்து இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சிக்குத் துணையாயிருக்கும் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அஸ்வர் அவர்களுக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். மேலும் முஸ்லிம் எழுத்தாளர்களையும், வெளியீட்டாளர்களையும் வாழ்த்தி ஆதரித்துவரும் அவரது சேவை எமது பாராட்டுக்குரியதாகும்.

ஜனாப் ஜெமீல் அவர்களின் இப்படைப்பு இலங்கை நூலகவியற்றுறையில் பாராட்டுக்குரியதொரு சாதனையாகும். இதனை அறிவுலகம் வரவேற்று ஆதரிக்குமென்பதில் ஐயமில்லை.

ஜனாப் ஜெமீல் அவர்கள் இத்தகைய இலக்கியப் பணியில் தொடர்ந்து இயங்க எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.

கொழும்பு,
20.06.1994

எஸ்.எம்.கமால்தீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 1

# நூல் தேட்டம்

*1850*ஆம் ஆண்டிலிருந்து *1949*ஆம் ஆண்டுவரையான ஒரு நூற்றாண்டு காலத்துள் இலங்கை முஸ்லிம்களால் வெளியிடப்பட்ட நூல்களின் விபரங்களை உள்ளடக்கியதே இந்நூலாகும். அடுத்து வரும் மூன்று அத்தியாயங்களும் ஆண்டு வரிசையில் இவற்றினை நிரல்படுத்துகின்றன.

இஸ்லாமிய இலக்கியத்துறைக்கு இந் நூற்றாண்டில் ஆகக்கூடிய தொண்டாற்றியுள்ள பேராசிரியர் கலாநிதி கலாசூரி அல்லாமா அல்ஹாஜ் ம.முஹம்மது உவைஸ் அவர்கள் அடிக்கடி எமது அமைச்சுக்கு வரும் போதெல்லாம், இலக்கிய முதுசங்களை அடுத்தடுத்த தலைமுறையினருக்கு விட்டுச் செல்வதைப் பற்றிக் கலந்துரையாடுவார். அவர் பல்கலைக்கழகப் பிரவேச நேர்முகப் பரீட்சைக்குச் சென்ற வேளையில் இஸ்லாமிய இலக்கியத்தைப் பற்றி எதுவும் அறியாதிருந்ததைப் பற்றியும், பிற்காலத்தில் அத்துறையில் ஆழ்ந்த ஆய்வில் ஈடுபட்டு, இஸ்லாமிய இலக்கியங்கள் ஈராயிரத்துக்கு மேல் இயற்றப்பட்ட மாபெரும் விடயத்தை வெளிக் கொணர்ந்ததைப் பற்றியும் பிரஸ்தாபிப்பார். இக் கலந்துரையாடல்களே, என்னுள்ளே பலகாலம் புதையுண்டுகிடந்த ஓர் எண்ணத்துக்கு வடிவம் கொடுத்தன.

மிக நீண்ட காலமாக என்னிடம் ஒரு பழக்கம் இருந்து வருகிறது. ஏதாவதொரு நூல் என் கைவசம் கிடைத்தவுடன், அதனை வாசிப்பதற்கு முன்பாகவே அதற்குரிய விபர அட்டையைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(BIBLIOGRAPHY CARD) தயாரித்தலே அதுவாகும். காலக்கிரமத்தில் அவை நூற்றுக் கணக்கில் சேர்ந்துவிட்டன. ஒரு முறை அவ்வட்டவணைகளை ஒழுங்கு படுத்தித் தருமாறு அட்டாளைச் சேனை கல்வி கல்லூரியின் தற்போதைய தலைவரும்; கடந்த கால் நூற்றாண்டு காலத்துள் பலமுறை என்னோடிணைந்து நற்பணியாற்றியவருமான மருதமுனையைச் சேர்ந்த ஏ.ஆர்.ஏ. அஸீஸ் அவர்களிடம் ஒப்படைத்தேன். அவர் அதனைச் செவ்வனே நிறைவேற்றித் தந்தமையினால், இன்று அவற்றை வைத்துக் கட்டுரைகள் எழுதுவது மிக இலகுவாகின்றது.

இந்நூலில் இடம் பெறும் மூன்று அத்தியாயங்களும், தனித் தனிக் கட்டுரைகளாக வெளிவந்தவையாகும். முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் ராஜாங்க அமைச்சினால் வருடாவருடம் நடத்தப்படும், 'வாழ்வோரை வாழ்த்துவோம்' எனும் முஸ்லிம் கலாச்சார விருது விழாவையொட்டி வெளியிடப்பட்ட 1993,1994 விசேட மலர்களிலும், தேசியப் பத்திரிகையான தினகரனிலும் அவை வெளிவந்தன.

1850 தொடக்கம் 1949வரையான ஒரு நூற்றாண்டு காலத்துள் வெளிவந்த நூல்கள் பற்றிய விபரங்களைப் பெறுவதில் பல இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. இவற்றுள் சில நூல்கள் எனது கைவசம் உள்ள காரணத்தினால், அவை தொடர்பான தகவல்களை மிக இலகுவாகப் பதிய முடிந்தது. ஏனையவை பற்றிய விபரங்களை அரசாங்க ஆவணக் காப்பகம் (ARCHIVES) ,அரும் பொருட்சாலையின் நூலகம்; தேசிய நூலக சேவைகள் சபை; பேராதனைப் பல்கலைக்கழக நூலகம் போன்ற இடங்களிலேயே பெறுதல் வேண்டும். இத் தேடலுக்கு நேரம், அவகாசம், பொறுமை என்பன மிக அவசியம். துரதிருஷ்டவசமாக முன்னைய இரண்டும் எனக்கில்லை. ஒரு மாதத்தில் ஓர் அரை நாளையாவது அதற்கென ஒதுக்கக்கூடிய நிலை எனக்கில்லை.

அக்குறைபாட்டினை நிவர்த்தி செய்பவர்கள் எனது மனைவி சித்தி ஆரிபா; மகன் அல்ஹாஜ் நஸீல் எம்.ஜெமீல் ஆகியோராவர். 1966இல் நாம் விவாகம் முடித்த காலத்திலிருந்து, எனது கட்டுரைகளைச் சொல்வதெழுதல், தட்டச்சு வசதியில்லாத வேளைகளில் இறுதிப்படியெடுத்தல்; பல்வேறு நூல்களிலிருந்து தேவையான குறிப்புகளைப் பெற்றுத்தரல் என்பனவற்றில் எனது மனைவி உதவி வருகிறார். இவ்விருவருமே பல நாட்கணக்கில் முக்கியமாகக் கொழும்பு ஆவணக் காப்பகத்தில் தேடுதல்களில் ஈடுபட்டு, அவ்வாறு தேடிப் பெற்றவற்றை அட்டைகளில் பதிவுகளாக்கித் தந்தனர், அதனாற்றான் அவற்றினை நிரல்படுத்தி, இக்கட்டுரைத் தொகுதியை எழுதுவது எனக்கு இலகுவாயிற்று.

இத் தேடுதலில் எனது நெருங்கிய உறவுப் பிள்ளைகளான எம்.ஐ.எம்.சித்தீக், எம்.இசட்.ஷாஹிட் றிஷாட், செல்வி இத்திகார் பானு முஸ்தபா; ஏ.எச்.எம்.ஸியாத் ஆகியோரும் உதவினர்.

பழம் நூல்களை அல்லது அவை பற்றிய விபரங்களைத் தேடிப் பெறுதல் சிரமமான காரியமாகும். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்து அவை தொடர்பான ஆவணப் பதிவுகளில் நூல்கள் பற்றிய விபரங்கள் யாவும் ஆங்கிலேய மொழியில் பதியப்பட்டுள்ளன. அதனால் சில வேளைகளில் ஒரு நூலின் சரியான பெயர் என்ன என்பதை அறிவதே சிரமமான காரியமாகிவிடும். உதாரணமாக அக்கரைப்பற்று கருங்கொடித்தீவு ஏ.பி.முஹம்மது பூலூப் ஆலிம் சாஹிப் வெளியிட்ட தமிழ் நூலொன்று JUDGEMENT OF MUSLIMS' எனப் பதியப்பட்டுள்ளது. இதன் உண்மையான தமிழ்ப் பெயரென்ன? அதனை அறிவதற்கு அந்நூலையே தேடிப் பெறுதல் வேண்டும். அதற்குப் போதிய நேர அவகாசம் வேண்டும். இச்சிறிய விடயத்திற்கு இத்தனை நாளா என அலுப்புத் தட்டும் வேளைகளும் உண்டு. ஆனால் கடைசியாக நூலைத் தேடிப்பிடித்து அதன் பெயர் 'முஸ்லிம்களின் நீதிமுறைகள் ' என அறியும் போது ஏற்படும் மனத் திருப்தி அலாதியானதாகும். இவ்வாறான சந்தர்ப்பங்கள் அடிக்கடி ஏற்படும்.

அத்துடன், எமக்குக் கிடைக்கப் பெறும் பதிவு இடாப்புக்கள் பல்வேறு விதமான தகவல்களைக் கொண்டிருக்கும். நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், அரசாங்க ஆவணங்கள் போன்ற பல்லாயிரக்கணக்கான பதிவுகளுள் எமக்குத் தேவையானவற்றைத் தேடிப் பெறுதலும்; அவசியமாயின் அந்நூ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லையே தேடி எடுத்தலும் பாரியதொரு பணியாகும். எனினும் வருங்கால சந்ததியினருக்கு இத்துறையிலான ஈடுபாட்டினை ஏற்படுத்தவும், ஆய்வினை இலகுவாக்கவும் உதவக்கூடிய பணியாக இது மேற்கொள்ளப்படுகின்றது.

தற்போது நூல் வெளியீட்டுத்துறையில் ஈடுபட்டிருப்போருக்கான ஆலோசனையொன்றை இவ்விடத்திற் கூறுவது பொருத்தமெனக் கருதுகிறேன். தம்மால் வெளியிடப்படும் புத்தகங்களைப் பற்றிய விபரங்கள் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டுமென ஒவ்வொரு எழுத்தாளனும் விரும்புவது இயல்பே. அதற்காகத்தான் அச்சகத்தினர் தாம் வெளியிடும் நூல்கள் ஒவ்வொன்றினதும் ஐந்து பிரதிகளை அரசாங்க ஆவணக் காப்பகத்துக்கு அனுப்ப வேண்டுமெனச் சட்டமுண்டு. எனினும் எல்லா அச்சகத்தினரும் இதனைக் கடைப்பிடிக்கின்றார்களா என்பது சந்தேகமே. எனவே நூலாசிரியர்களே தமது வெளியீடுகளின் பிரதிகளை ஆவணக் காப்பகம்;அரும்பொருட்சாலை,தேசிய நூலக சேவைகள்சபை;பல்கலைக்கழக நூலகங்கள்,கொழும்பு பொது நூலகம் போன்ற இடங்களுக்கு அனுப்புதல் அவை என்றும் பாதுகாப்பாயிருக்க உதவும்.

ஒரு நூற்றாண்டு காலத் தகவல்களை இந்நூல் தன்னகத்தே கொண்டுள்ளது. 1950க்குப் பின்னரான காலப்பகுதியின் தேடலில் தற்போது ஈடுபட்டுள்ளோம். அக்காலப்பகுதிக்கான 'விபர அட்டைகள்' தற்போது ஆயிரத்தை எட்டியுள்ளன. இன்ஷா அல்லாஹ்! அவற்றினையும் ஒரு நூலாக வருங்காலத்தில் வெளியிடும் எண்ணமுண்டு. *1950-59, 1960-69;1970-79; 1980-89* என அவற்றினை வகைப்படுத்தும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனது சமீப கால ஆக்க இலக்கிய முயற்சிகளில் உறுதுணையாகவும் உந்து சக்தியாகவும் இருப்பவர்கள் இருவர். அவர்களுள் ஒருவர் எனது ஆசான் கன்சுல் உலூம் அல்ஹாஜ் எம்.எம்.எம்.மஹ்றூப். கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியில் விரிவுரையாளராக வாழ்வைத் தொடங்கி, முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளராக ஓய்வு பெற்றவர். அறிஞர், சர்வதேச தரத்திலான கட்டுரையாளர்.



அடுத்தவர் அவரது ஆசான் கன்சுல் உலூம் அல்ஹாஜ் எஸ்.எம்.கமால்தீன். இவரும் கொழும்பு ஸாஹிறாவில் உத்தியோக வாழ்வை ஆரம்பித்து, பின்னர் நூலகத் துறையில் பாண்டித்தியம் பெற்று கொழும்பு பொதுநூலகத்தில் பிரதி நூலகராயும், தேசிய நூலக சேவைகள் சபையில் உதவிப் பணிப்பாளராயுமிருந்து, இன்று இஸ்லாமிய நிலையத்தின் பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றும் ஓர் ஆய்வாளர், அறிஞர். கமால்தீன் அவர்கள் கலாநிதி அல்ஹாஜ் ரீ.பி.ஜாயாவின் மாணவரும், ஏ.எம்.ஏ.அஸீஸ் அதிபராயிருந்த காலத்து விரிவுரையாளருமாவார். எனவே, கொழும்பு ஸாஹிறாவின் சிறப்பு மிக்க வாழையடி வாழை வரலாற்றுப் பாரம்பரிய மரபினை இது எடுத்துக்காட்டுகிறது-எனக் கொள்வது பொருத்தமுடையதல்லவா!

இந்நூலின் மூலப் பிரதியை மிகவும் நேர்த்தியாகத் தட்டச்சுச் செய்தவர் செல்வி.நபீலா அலி ஆவார். சுதந்திர இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத்தில் மூதூர்த் தொகுதியின் பிரதிநிதியாயிருந்த மர்ஹூம் ஏ.ஆர்.ஏ.எம்.அபூபக்கரின் பேத்தி. மிகவும் புத்திசாலியான நபீலாவுக்குச் சிறந்த எதிர்காலமுண்டு. அல்லாஹ் துணைபுரிவானாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம்-2

## 1850-1899

பத்தொன்பதாம் நூற்றாண்டின் அரையிறுதிப் பகுதியிலேயே, இலங்கை முஸ்லிம்களால் எழுதப்பட்ட நூல்கள் அச்சுருவில் வெளிவரத் தொடங்கின. அவைகளில் இரு பண்புகளைக் காணலாம். முதலாவது, அக்கால வழக்கிலிருந்த அறபுத் தமிழ் மொழியிலேயே ஆரம்பகால நூல்கள் வெளிவந்தன. இரண்டாவதாக, ஏறக்குறைய எல்லா நூல்களுமே சமய இலக்கியங்களாயிருந்ததோடு, அநேகமானவை செய்யுள் வடிவில் அமைந்திருந்தன.

இன்று எமக்குக் கிடைப்பவைகளுள் முதன்முதல் வெளிவந்துள்ளது:

1. பேருவளையைச் சேர்ந்த செய்ஹு முஸ்தபா வலியுல்லாஹ்வின்

   'மீஸான் மாலை' எனும் அறபுத் தமிழ் நூலாகும்.
   இது *1868* இல் வெளிவந்தது.

   அதனைத் தொடர்ந்து பிரசுரிக்கப்பட்ட அறபுத் தமிழ் நூல்கள் வருமாறு:

   முதலாவது வரி நூலாசிரியரின் பெயர்; அடுத்து முறையே நூலின் பெயர்; வெளிவந்த இடம்; வெளியீட்டாளர்/அச்சகம்; ஆண்டு; மொத்தப் பக்கங்கள், விலை என்பவற்றைக் குறிக்கும். ஆயினும் எல்லா நூல்களுக்கும் இத்தகைய விபரங்களைப் பெறுதல் கஷ்டமாகும்.



2. செய்கு முஸ்தபா வலியுல்லாஹ்
   பதஹுர் றஹ்மான் பீ தர்ஜுமாஹ் தப்ஸீறுல் குர் ஆன்
   (குர் ஆன் விளக்கவுரை)
   பேருவளை
   *1873*
3. செய்கு முஹம்மது லெப்பை ஆலிம்
   (கசாவத்தை ஆலிம் அப்பா)
   தீன் மாலை
   கண்டி
   *1878*
4. செய்கு அப்துல் றஹ்மான் இபுனுல் ஹக்கீம் ஹாஜி மீரா லெப்பை மரைக்கார் அல்மக்தூமி,
   வாதவிலக ஆராட்டு
   கொழும்பு
   சீ.எல்.எம்.முதலியார் அப்துல் ஷுபூர்
   *1899* ஜுன் *22*
   *16* *10* சதம்

'அறபுத் தமிழ்' மொழியில் ஆரம்ப கால நூல்கள் வெளிவந்தாலும், அவற்றைத் தொடர்ந்து வந்த அநேகமான நூல்கள் தமிழ்மொழியிலேயே வெளிவந்துள்ளன.

வெளி வந்த ஆண்டுக் கிரமப்படி அவை கீழே தரப்பட்டுள்ளன.

5. சேகுத் தம்பி.சா
   *சீறா நாடக மன்ற காரணமாலை,*
   சென்னை மனோன்மணிய விலாச அச்சுக்கூடம்
   *1878*
   *184*
6. ஆமீது அ.லெ.
   இபுலீசு படைப்போர்,
   கொழும்பு
   முஸ்லிம் நேசன் பிரஸ்,
   *1883*
   *16*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. யமணி.எஸ்.
அன்னத்தீஜத்துல் அஹ்தலிய்யா பீ
பனாகிபிலாமுன் ஹத்துல் பர் பலிய்யா
*1889*

8. அசனாலெவ்வை, சு.மு.
புகழ்ப்பாவணி
யாழ்ப்பாணம்
சு.மு. அசனாலெவ்வை
*1890*
*36*

9. சின்ன இப்றாஹீம் மரைக்காயர்
முஹையதீன் கற்புடையார்
நபியுல்லா பேரில் கீர்த்தனை
மன்னார்
அசனாப்பிள்ளை முஹையதீன் மாப்பிள்ளை மரைக்காயர்
*1891* டிசம்பர்
*20*

10. முஹம்மதுக் கண்ணு ஏ.
ஹம்ஸீன பர்ளு மாலை
கொழும்பு
எல்.எம். உதுமான்
*1892* ஜூன் *16*
*14, 12* சதம்

11. சேகு அப்துல் காதர் சி.எல்.எம்.
முஹம்மதிய தமிழ்க் கீர்த்தனைகள்
காலி, கோட்டை
அல்பியன் பிரஸ்
*1892* அக்டோபர்
*18, 10* சதம்



12. செய்கு ஹபீப் முஹம்மத் அலி சாஹிப்
ஞானதீப சங்காரம்
கொழும்பு
முஸ்லிம் நேசன் பிரஸ்
*1893* ஜனவரி *16*
*34, 15* சதம்

13. முஹம்மது நியாஸ்தீன் ஸாஹிப்,
நீதி விநோதக் கதை
கொழும்பு
ஸ்டார் பிரஸ்
*1893* மார்ச் *22*
*38, 25* சதம்

14. முஹம்மதுக் கண்ணு ஏ.
ஆஷுரா காரணக் கும்மி
கொழும்பு
*1893* மே *7*
*18, 12* சதம்

15. எம்.ஸி.சுல்தான் முஹைதீனும்
எம்.ரி.சுலைமாலெவ்வையும்,
பாவணி அலங்காரமும் முனாஜாத்தும்
கொழும்பு
விக்டோரியா ஜுபிலி அச்சுக்கூடம்
*1893* மே *12*
*10, 6* சதம்

16. லெவ்வை எஸ்.எம்..
சர்வந்த மேகோபதார்த்துவம்
யாழ்ப்பாணம்
அப்துல் காதர் ஆலிம் சாஹிப்
சைவப்பிரகாச அச்சகம்
*1895* நவம்பர்
*8*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. முஹம்மதுப் புலவர், எஸ்.ஏ.
முஹைதீன் அப்துல் காதர் பேரில் பாடல்
கொழும்பு
முஸ்லிம் நேசன் பிரஸ்
*1895* நவம்பர்
*12, 25* சதம்

18. ஆலிம் எஸ்.எல்.எம்.ஐ.எல்.எம்.
துஹ்பதுல் ராகிபீன்
கொழும்பு
அலாமதுல் லங்காபுரி பிரஸ்
யூனுஸ் இப்னு ஸல்தீன்
*1895* டிசம்பர்
*73, 25* சதம்

19. முஹம்மதுக் கண்ணு, ஏ.
செய்ஹு அஷ்ரவொலி பேரில் பாடல்கள்
கொழும்பு
எல்.எம்.உதுமான்
இஸ்லாம் மித்திரன் பிரஸ்
*1895* டிசம்பர்
*10, 12* சதம்

20. முஹம்மதுக் கனி, எ. டாக்டர்
மிஹ்றாஜ் பற்றியது
*1895*

21. ஹக்கீம் அலியா மரிக்கார், எ.எல்,
முஹம்மதியப் பிரார்த்தனை
கொழும்பு
முஸ்லிம் நேசன் பிரஸ்
*1896* மார்ச் 2
*6, 10* சதம்



22. அலியார் மரிக்கார், அ.லெ.ம.
ஐக்குத்த ஆலாவின் பேரில் முனா ஜாத்து
கொழும்பு
முஸ்லிம்நேசன் பிரஸ்
*1896*
*06*

23. செய்ஹு முஹம்மது உபாத்தியாயர்
மசாயிகுமாலை காவியம்
பேருவளை
*1896*

24. சுலைமாலெவ்வை, எம்.ஜே
கஹ்றாமதல் மினன் அலல் முதா
அல்லிமினாமினல் வில்தான்
கொழும்பு
வாப்பிச்சி மரைக்கார்
மொஹம்மதன் பிரஸ்
*1897* அக்டோபர்
*112, 75* சதம்

25. அப்துல் அஸீஸ் ஐ.எல்.எம்.
சத்தின் ஞானார்த்தம்
கொழும்பு
*1898* ஜூன் *14*
*13, 15* சதம்

26. சின்னக் கனி லெவ்வை, மு. பா.,
முஹையதீன் முனாஜாத்
கொழும்பு
ஓ. சல்டீன்
*1899* அக்டோபர்
*36, 50* சதம்

27. காதிறு பாஷா ஷாஹிபு
தத்துவ பரகண்டன திக்காறு கண்டனம்
*1899*
*36*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. காதிறு பாஷா ஷாஹிபு
அறக்கட்டளை மௌலவி ஷாஹிப்புக்கு
அறிவுறுத்தல்
சென்னை
*1899*
*8*

29. அப்துர் ரஸ்ஸாக்கு, கா.பா.பு
சத்தைக் கடவுளாய்க் கொண்டோரைக் காபிரென்றுணர்த் தும் நற்சாட்சிப்பத்திரம்
கொழும்பு
மௌலானா செய்யது அப்துர் ரகுமான் மஷ்கூறு
ஸ்டார் பிரஸ்
*1899*
*10*

30. அபூபக்கர் ஸாஹிபு, மு.
சிதடமதவாய் ஆப்பு
சென்னை
தத்துவ விளக்க அச்சுக்கூடம்
*1899*
*30*

31. அப்துல் அஸீஸ், ஐ.எல்.எம்
சத்தைக் கடவுளாய்க் கொண்டோரைக் காபிரென்றுணர்த் தும் நற் சாட்சிப் பத்திர மறுப்பு
கொழும்பு
*1899*
*23*

*19* ஆம் நூற்றாண்டில் இலங்கை முஸ்லிம்களின் தலை சிறந்த சிந்தனையாளராயும், கல்விமானாயும், சீர்திருத்தவாதியா யும் விளங்கிய சித்திலெவ்வை அவர்களே நூல் வெளியீட்டுத் துறையிலும் முன்னிற்கின்றார். சித்திலெவ்வை மரைக்கார் முஹம்மதுக் காசிம் மரைக்கார் தான் நிறுவிய 'முஸ்லிம் நேசன்' அச்சகத்தின் மூலம் தனது நூல்கள் பலவற்றை வெளியிட்ட தோடு பிறரது நூல்கள் வெளிவருவதற்கும் துணையாயிருந்தார்.



இலங்கையின் முதலாவது தமிழ் நாவல் அவரது
(32)'அசன்பேயுடைய கதை'
என்பதாகும். கொழும்பு முஸ்லிம் நேசன் அச்சகத்தினால் *1885* ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட இதன் விலை 50 சதமாயிருந்தது.

இதன் இரண்டாவது பதிப்பு, சென்னை அர்ச். சூசையப்பர் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டு, பா. முஹம்மது அப்துல்லா சாகிப் என்பவரினால் *1890*இல் வெளியிடப்பட்டது. *1885* இல் 'அசன்பேயுடைய கதை' என்றிருந்தமை, *1890* இல் 'அசன்பே யுடைய சரித்திரம்' என மாற்றமடைகின்றது. அக்காலகட்டத் தில் நாவல்கள் பிரதாப முதலியார் சரித்திரம்,கமலாம்பாள் சரித்தி ரம், பத்மாவதி சரித்திரம் என நாமம் சூட்டப்படும் வழக்கமிருந்த தைக் கவனிக்கலாம்.

மூன்றாவது பதிப்பு, சென்னையில் *1974* ஆம் ஆண்டு மே மாதம் *31*,ஜூன் *1, 2* ஆம் திகதிகளில் நடைபெற்ற இரண்டா வது அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டின் போது, அல்ஹாஜ் எஸ்.எம். கமால்தீன் அவர்களது முன்னுரையோடு வெளிவந்தது.

தற்போது, முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இரா ஜாங்க அமைச்சர் மாண்புமிகு அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அஸ்வர், பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் பணிப்பின் பேரில், இவ் வமைச்சு *1990* இல் நான்காம் பதிப்பை வெளிக்கொணர்ந்துள் ளது.

சித்திலெப்பையின் ஏனைய நூல்கள் வருமாறு:

33. ஹிதாயத்துல் காசிமிய்யா பிஷஹ்லில் சியாத்தில் அறபியா (அறபு மொழியில்)
கண்டி
*1891* மே *15*
*242*, ரூ.*1.50*

34. அறபு முதலாம் புத்தகம்
கண்டி
*1891* ஜூன் *12*
*78*, *25* சதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. அறபு-இரண்டாம் புத்தகம் (கிதாபுல்லானியா)
1891 செப்டம்பர் 12
80, 25 சதம்

36. கிதாபுல் ஹிஸ்ஸத் (அறபியில்)
(கணிதம்-முதலாம் புத்தகம்)
கண்டி
1891 அக்டோபர்
16, 5 சதம்

37. தமிழ்-முதலாம் புத்தகம்
1892 பெப்ரவரி 10
28, 10 சதம்

38. துஹ்பதுல் நகுவு
(அறபு நகுவு) (அறபுத் தமிழில்)
கண்டி
1892 பெப்ரவரி 28
112, 75 சதம்

39. அஸ்றாறுல் ஆலம்
கொழும்பு
ஸ்டார் பிரஸ்
1897 டிசம்பர் 23
200, 2ரூபாய்

40. துருக்கி-கிரேக்க யுத்தம்
டயமண்ட் அச்சகம்
1898 ஆகஸ்ட்

41. அபூநுவாசின்கதை
கொழும்பு
ஸ்டார் பிரஸ்
37, 12 சதம்



42. சுறுததுஸ் ஸலாத்து
கொழும்பு
ஸ்டார் பிரஸ்
50 சதம்

19-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பெருந்தொகையான கவிதைகளைப் புனைந்த பிறிதொருவர் அருள்வாக்கி அப்துல் காதிராவார். மலைநாட்டிலுள்ள தெல்தோட்டை, பட்டியகாமம் கிராமத்தைச் சேர்ந்த அவரது பாடல்கள் ஏராளம். அவற்றுட் சில வருமாறு: முதுமொழி மாலை; திருமதீனத்தந்தாதி மாலை; ஆரிபு மாலை; பேரின்ப ரஞ்சித மாலை; ஞானப் பிரகாச மாலை, வழிநடைபைத்து மாலை; பிரான்மலைப் பதிகம், தேவாரப் பதிகம், சலவாத்துப் பதிகம்; பதாயிகுப் பதிகம்; கானுமியா சாஹிபு வலியுல்லாப் பதிகம்; முத்துப்பேட்டை சேகுதாவூதுவலியுல்லா பதிகம்; முஹியத்தீன் ஆண்டகை காரணப் பிள்ளைத் தமிழ்; உமறொலியுல்லா பிள்ளைத் தமிழ்; பலவண்ணத் திரட்டு; ஞானமணித் திரட்டு; சித்திரக்கவி புஞ்சம்; பிரபந்த புஞ்சம், காட்டுபாவா சாஹிபு கும்மி; திருபகுதாதந்தாதி; கண்டிக் கலம்பகம், மெஞ்ஞானக் குறவஞ்சி; சமரகவிக் கொத்து; நவமணி கீதம்; விநோத மஞ்சரி; கோட்டாறுப் புராணம்; மெஞ்ஞானக் கோவை; சந்தத் திருப்புகழ்; திருச்சந்தப்பிள்ளைத் தமிழ். இவரது வசன நடை நூல் 'தன்பீஹுல் முரிதீன்' என்பதாகும்.

இவ்வாறு பெருந்தொகைப் பாடற்தொகுதிகளை இயற்றியிருப்பினும் இன்று நூலுருவிற் சிலவற்றையே பெறக்கூடியதாயுள்ளது. அவையாவன:

43. சேகப்துல்லா நாதரவர்கள் பேரில் பதிகம்
சென்னை
பிரின்ஸ் ஒவ் வேல்ஸ் அச்சியந்திர சாலை
1887
16

44. பிரான் மலைப் பதிகம்
சென்னை
1887



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. முஹியத்தீன் ஆண்டகை காரணப்பிள்ளை தமிழ்
கொழும்பு
இஸ்லாமிய அச்சியந்திரசாலை
1895
52

46. முஹியத்தீன் அப்துல் காதிர் ஜெயிலானி பேரில்
பேரின்ப ரஞ்சித மாலை
மதுரை
முஹம்மது முத்து பாவாப் புலவர்
1899
20

47. பிரபந்த புஞ்சம்
திருவாங்கூர்
சுல்தான் முஹியத்தீன்
1901
50

48. காட்டுபாவா சாஹிபு ஆண்டகை பேரில் காரணக் கும்மி
கொழும்பு
சென்னை வாணிவிலாச அச்சகம்
1905

49. சந்தத் திருப்புகழ்
கொழும்பு
நடராஜா அச்சியந்திர சாலை

50. தன்பீஹுல் முரிதீன்
(ஞானதீட்சை பெறுபவன் அறிய வேண்டியது)
1911

50.A. தைக்கா சாஹிப் ஒலியுல்லா அவர்கள்
பேரில் பிள்ளைத் தமிழ்
சென்னை முஸ்லிம் அபிமானி அச்சியந்திரசாலை
1908
48



50.B. திருச்சந்தப் பிள்ளை தமிழ்
மதுரை/விவேகபானு அச்சியந்திரசாலை
1914

கடந்த நூற்றாண்டில் சில அறபு நூல்களும் வெளிவந்துள்ளன.

அவையாவன:

51. எம். ஹாஜியார்
பத்றியா வாஹிதியா
பேருவளை
1891 ஏப்ரல் 3
20, 50 சதம்

52. அஹமத் பின் முஹம்மத் ஹசன்
துற்றத்துல் மபாஹிர் ஹிதாயத்துல் ஹைர்
கொழும்பு
மதரஸதுல் ஹைரியா
1893 ஆகஸ்ட் 27
64, 50 சதம்

53. ஓ.சல்டீன்
ராத்திபுல் நக்ஷபந்தியா
கொழும்பு
முஹம்மது லெவ்வை பின் உதுமான் லெவ்வை
1899 நவம்பர் 27
56, 50 சதம்

இக்கால கட்டத்துள் முஸ்லிம் ஒருவரால் எழுதப்பட்டு வெளி வந்த சிங்கள நூல்:

54. ஹசன் அப்துல் காதர் வாழ மஸ்தான்
கருணா குரு போர்வை கவி
காலி
1893 மார்ச்
8, 25 சதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் - 3

## 1900 - 1924

19 ஆம் நூற்றாண்டில் இந்நாட்டில் இலக்கியம் படைத்தோரில் இருவர் முக்கிய இடத்தை வகித்தனர். ஒருவர் அறிஞர் சித்திலெவ்வை; அடுத்தவர் அருள்வாக்கி அப்துல் காதிர். இருவரும் கண்டிப் பிரதேசத்தவர்.

இவ்விருவரைப்போன்று அநேக நூல்களைப் படைத்தோரை இருபதாம் நூற்றாண்டின் முதற்காற் பகுதியில் நாம் இனங்காண முடியாமலுள்ளது.

ஆனால் பிறிதொரு சிறப்பம்சத்தை இத்தசாப்தங்கள் கொண்டுள்ளன. அதுவே ஆறு மொழிகளில் இஸ்லாமிய இலக்கியம் வெளிவந்துள்ளதைக் காண்கிறோம். தமிழ், அறபு, அறபுத் தமிழ்,சிங்களம், ஆங்கிலம்,மலாய் ஆகிய மொழிகளில் இக்காலகட்ட முஸ்லிம்கள் நூல்களை வெளியிட்டுள்ளனர்.

இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமது எழுத்துகளின் மூலம் சமூதாயத் தாக்கத்தை ஏற்படுத்தியவர் ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ் ஆவார். சித்திலெவ்வையின் பணியைத் தொடர்ந்து செய்த அப்துல் அஸீஸ் தமது 'முஸ்லிம் பாதுகாவலன்' பத்திரிகை மூலமும் நூல்களின் மூலமும் சமுதாய நலனைப் பாதுகாப்பதில் முன்னின்றார். 1900 ஆம் ஆண்டில் சோனகர் சங்கத் தலைவராகவும், 1903 ல் மருதானைப் பள்ளிவாசல் நம்பிக்கையாளராகவும் தெரிவானார்.

கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியை நிறுவுதல், துருக்கித் தொப்பிப் பிரச்சினையில் முஸ்லிம்களின் தனித்துவத்தை நிலை நாட்டல், தனது பத்திரிகை மூலமும், நூல்கள் மூலமும், உரைகள் மூலமும் சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்துதல்; இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றைத் தெளிவு படுத்துதல் ஆகியவைற்றில் அப்துல் அஸீஸ் ஆற்றிய சேவைகள் என்றும் நிலைத்து நிற்கக் கூடியவையாகும்.

